**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இ.ம.எண். 3/2023**

**இன்**

**அ.வ.எண். 200/2022**

M. அர்ஜுனன் ----- மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

பிரபாகரன் ----- எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது 09.11.2023 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A. சுரேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. இராஜமாணிக்கம் மற்றும் V. பச்சைமுத்து ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 7 ரூல் 11-ன்படி மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது 10.10.2018 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் அடிப்படையில் உண்மை நிலையை மறைத்து பொய்யாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகும். வழக்குச் சொத்தில் சரி பாகம் கோருவதற்கு வாதி, மனுதாரரின் வாரிசு அல்ல. மனுதாரரின் தகப்பனார் மாரியப்பன் என்பவருக்கு பிரதிவாதி, பேச்சியம்மாள், மதியழகன் மற்றும் தங்கப்பிள்ளை என்கிற பர்வதம் வாரிசுகள் ஆவார்கள். வழக்குச் சொத்தானது பிரதிவாதிக்கும், மதியழகனுக்கும் மட்டுமே பாத்தியம் என்பதைப் போல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து நபர்களையும் வாரிசுகளாகக் குறிப்பிட்டே அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டு பிரதிவாதியின் மூத்த சகோதரி அவரது தகப்பனாருக்கு வாரிசு உரிமை கோரி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.283/2019 என்ற வழக்கை பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியின் மனைவி அய்யம்மாள் மகள் துர்கா, இளைய

மகன் சத்யசீலன் ஆகிய வாரிசுகள் இருப்பதை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் பாகத்தில் சரிபாதி பாகம் கேட்பது எவ்வகையிலும் நியாயம் கிடையாது. அதனை வாதி வழக்கு மூலத்தில் சொல்லவும் இல்லை. மேலும் வழக்கானது திருத்தம் செய்வதற்கான சூழ்நிலையும் இல்லை. எதிர்மனுதாரரையும், அவரது வாரிசுகளையும் தொல்லை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமைப்பட்ட பாகஸ்தர்களை மறைத்து வழக்கு மூலமே இல்லாமல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது சட்டப்பூர்வமாக நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதியின் தகப்பனாரும், அவரது சகோதரர்களும், சகோதரிகளும் சுயமாகச் சம்பாதித்த சொத்தை வில்லங்கம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து பாகமும் பிரதிவாதியுடையது என்றும், அதில் சரிபாதி வாதியுடையது என்றும் வழக்குத் தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்குப் புறம்பானது. பொய்யான சங்கதிகளைத் தெரிவித்து வீண் காலவிரையம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் அசல் வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் அசல் வழக்கானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டும். அசல் வழக்கானது உண்மைக்குப் புறம்பானது என்பதால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கை பாகப்பிரிவினை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் தனி சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் 27.07.2022 அன்று வழக்கறிஞர் மூலமாக முன்னிலையான மனுதாரர் முறையாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்துவதற்குப் பதிலாக காலம் தாழ்த்தும் வகையில் பொய்யான விபரங்களைக் கூறி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். பாகப்பிரிவினை கோரி மனுதாரருக்கு 27.09.2021 அன்று அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 04.10.2021 அன்று பெற்றுக்கொண்ட மனுதாரர் உரிய பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. எதிர்வழக்குரையில் தெரிவிக்கவேண்டிய விபரங்களை எல்லாம் இம்மனுவில் தெரிவித்து மனுதாரர் குழப்பம் ஏற்படுத்தியுள்ளார். அசல் வழக்கு தீர்வு செய்ய வேண்டியதில் இம்மனுவில் எவ்வித ஆதாரமுமின்றி தீர்வு செய்ய இயலாது. மனுதாரர் தனக்கு உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் இருப்பதாகவும், துர்கா என்ற மகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் மறுபுறம் சத்யசீலன் என்பவரை மகனாகக் காட்டி அவருக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை 08.10.2021 அன்று பதிவு செய்து கொடுத்துள்ளார். பாகப்பிரிவினை கோரி 04.10.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்பே மனுதாரர் இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தைத் தயாரித்துள்ளார்.

அசல் வழக்கில் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு சரியான வழக்கு மூலமும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வழக்கு மூலம் எழவில்லை என்பதை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர். மேலும் மனுதாரரின் இளைய மகன் என்று குறிப்பிடப்படும் சத்யசீலன் என்பவரை 2-ம் பிரதிவாதியாகச் சேர்த்துக்கொள்ள இத்துடன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மனுத் தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:-**

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு உடன்பிறந்த சகோதர, சகோரிகள் இருப்பதாகவும், அவர்கள் அனைவரும் சேர்ந்து சம்பாதித்து பெறப்பட்ட சொத்தை மனுதாரருக்கு மட்டுமே உரிய சொத்து என்பது போல் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு அவரது மனைவியான அய்யம்மாள், மகள் துர்கா, மகன் சத்யசீலன் ஆகிய வாரிசுகள் இருப்பதை மறைத்து அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உரிய வழக்கு மூலம் இல்லை என்றும் தெரிவித்து அசல் வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி வாதிடப்பட்டுள்ளது.

6.2. மனுவானது அசல் வழக்கைத் தள்ளுபடி செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வழக்குரையை நிராகரிக்கக்கோரி (Rejection of Plaint) மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவே இந்நீதிமன்றம் புரிந்துகொள்கிறது. ஒரு வழக்குரையானது நிராகரிக்கப்படவேண்டுமென்றால் அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கவேண்டுமென உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 ஆனது தெளிவாகத் தெரிவிக்கிறது.

6.3. வழக்கு மூலத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதாகவும், உரிய நபர்களைத் தரப்பினர்களாகச் சேர்க்கப்படவில்லை என்றும், உண்மை விபரங்களை மறைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மனுதாரர் தரப்பில் தெரிவித்து வாதிடப்பட்டது. உண்மை விபரங்களை மறைத்து ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதோ, உரிய தரப்பினர்கள் வழக்கில் சேர்க்கப்படவில்லை என்பதோ, வழக்குரையை நிராகரிக்க காரணமாகிவிடாது.

6.4. உண்மையில் என்னென்ன விபரங்களை வாதி மறைத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்பதை பிரதிவாதி தரப்பே அசல் வழக்கு விசாரணையில் நிரூபிக்க

வேண்டும். மேற்படி சங்கதியை அவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து தான் தெரிவிக்க வேண்டுமே தவிர வழக்குரையை நிராகரிக்கக் கோரி மனு தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மேலும் வழக்குரையில் வழக்கு மூலமானது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.5. வாதியின் வழக்குரையானது பரிசீலனை செய்யப்பட்டது. 1-ம் பிரதிவாதி, வாதியின் தந்தை என்றும், தாவா சொத்துக்கள் 10.10.2018 அன்று பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக A அட்டவணைச் சொத்துக்களாக 1-ம் பிதிவாதிக்கு கிடைக்கப்பெற்றவை என்றும், அதில் 1-ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் சரிபாதி பாத்தியம் என்றும் குறிப்பிட்டு, அதனை 3-ம் நபர்களுக்கு 1-ம் பிரதிவாதி விற்க முயற்சிப்பதாகத் தெரிவித்து பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க வாதி தரப்பு வழக்கு மூலத்தை வெளிப்படுத்தவில்லை என்று கூறியிருப்பது ஏற்கத்தகுந்ததல்ல. மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ள காரணங்களை எதிர்வழக்குரையாகத் தாக்கல் செய்து அசல் வழக்கை நடத்த வேண்டுமே தவிர இவ்வாறான மனுவினைத் தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.01.12 17:47:49 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.01.12 17:47:55 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
இ.ம.எண்.3/2023
இன்
அ.வ.எண்.200/2022
______________ உத்தரவு
நாள் : 09.01.2024